# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

***OS.No.118/2008*** ***Date: 17.02.2026***

***DW1 –*** ராமசாமி

சாட்சி முன்னிலையானதின் பேரில் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும். வாதிகள் தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியல் சரிதான். தாவா சொத்துக்களில் சின்னாகவுண்டர் மகன் செல்லப்ப கவுண்டருக்கு 4/8 பாகமும், குப்பண்ணகவுண்டர் மகன் ரங்கையகவுண்டருக்கு 2/8 பாகமும், வரதப்பகவுண்டருக்கு 2/8 பாகமும் உரிமையுள்ளது என்றால், ஆதியில் உரிமையிருந்தது. செல்லப்பகவுண்டர் மகன் முத்து(எ) சின்னாகவுண்டருக்கு 2/8 பாகமும், சீரங்ககவுண்டருக்கு 2/8 பாகமும் உரிமையுள்ளது என்றால், சரிதான். முத்துகவுண்டர் மகன் ராமன்(எ) ராமசாமி இறந்துவிட்டார். அவரது மகள் அலமேலுக்கு 1/8 பாகம் உரிமையுள்ளது என்றால், சரிதான். முத்துகவுண்டரின் மகன் சின்னப்பன் இறந்துவிட்டார். அதனால் வாதிகளுக்கு 1/8 பாகம் கூட்டாக பாத்தியம் என்றால், சரிதான். சீரங்ககவுண்டர் மகன் ஜெயராமன் தன்னுடைய 1/8 பாகத்தை 2 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால், சரிதான். அதேபோல் 3 ம் பிரதிவாதி மணி தன்னுடைய பாகத்தை 1/8 பாகத்தை தன் மகன் 25 ம் பிரதிவாதிக்கு 15.03.2012 ல் விடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்றால், சரிதான். விடுதலை பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த ஆவணம் வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.7 ஐ நான் ஏற்றுக்கொள்கிறேன். 4 ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது 1/8 பாகத்தை தற்போது 24, 27 முதல் 29 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள். ரங்கையகவுண்டர் மகன் செல்லப்பன் இறந்துவிட்டதால் அவரது 1/8 பாகத்தை 4, 5 பிரதிவாதிகளின் வாரிசுகளும், 6, 7 பிரதிவாதிகளும் அனுபவிக்கிறார்கள். இறந்துபோன வரதப்பகவுண்டருக்கு சின்னாகவுண்டர் மற்றும் செல்லப்பகவுண்டர் ஆகியோர்கள்தான் மகன்கள். இவர்களுக்கு தலா 1/8 பாகம் பாத்தியம் என்றால், சரியல்ல. அவர்களுக்கு தலா 2/8 பாகம் பாத்தியம். சர்வே எண் 90 ல் மொத்த விஸ்தீரம் 16 ஏக்கர் 45 செண்ட். அந்த நிலம் ஒரே இனமாக கிழமேல் தார்

சாலைக்கும் வடபுறம் உள்ளது. சர்வே எண் 83/1ன் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 61 செண்ட். அந்த நிலம் தார் சாலைக்கு தென்புறம் உள்ளது. தாவா சொத்துக்கள் குறித்து சின்னாகவுண்டர் மகன் செல்லப்பகவுண்டரின் வாரிசுகளோ, ரங்கையகவுண்டரின் வாரிசுகளோ, வரதப்பகவுண்டரின் வாரிசுகளான சின்னாகவுண்டர், செல்லாகவுண்டர், செல்லப்பன் ஆகியோர்களது வாரிசுகளோ எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால், சரியல்ல. வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள். தாவா சொத்துக்களை பாகம் பிரித்து உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கப்படவில்லை என்றால், சரிதான். சர்வே எண் 90ல் பாதையோ, வீடுகளோ, கிணறு மற்றும் ஆழ்துளை கிணறோ, கட்டுமானங்களோ இல்லையென்றால், பாதை உள்ளது. பாதை உள்ளதாக நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. சர்வே எண் 90ல் மேற்குபுறத்தில் சுமார் 2 ஏக்கர் பாறையாக உள்ளது என்றால், சரிதான். வடபுறத்தில் சுமார் 1 ஏக்கர் பாறையாக உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி சொத்திற்கு தென்புறம் உள்ள தார் சாலையை தவிர வேறு சாலை இல்லையென்றால், சரிதான். அந்த சொத்தில் பொது பாதை அமைக்க வேண்டுமென்றால் சுமார் 1.5 ஏக்கர் தேவைப்படும் என்றால், தேவைப்படாது. சுமார் 75 செண்ட் இருந்தால் போதும். தாவா சொத்துக்களில் எங்கும் பாதை அமைத்து அனுபவிக்கவில்லை என்றால், சரிதான். சர்வே எண் 90ன் வடக்கு எல்லை தார் சாலையிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ளது என்றால், சரியல்ல ½ கி.மீ. இருக்கும். எனக்கு 1972ல் திருமணமானது. வாய்மொழியாக பாகப்பிரிவினையான தேதி, மாதம் தெரியாது, 1985ல் நடந்தது. எங்கு வைத்து யார் முன்னிலையில் பாகப்பிரிவினை நடந்தது என்று எனக்கு தெரியாது. யார் முன்னிலையில் சொத்தை அளந்து அத்து நிர்ணயிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் வாய்மொழி பாகம் நடக்கவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களில் எங்குமே எல்லை கற்கள் நடப்படவில்லை என்றால், சரியல்ல. வேலி அமைத்து அனுபவிக்கவில்லை என்றால், சரிதான். பழனியம்மாள் பாகத்திற்கும், மாரிமுத்து மகன் முருகேசன் பாகத்திற்கும், விஜயலட்சுமி பாகத்திற்கும் எல்லை கற்கள் நட்டுக்கொண்டுள்ளார்கள். நான்

சொல்வதுபோல் அத்துக்கண்டு எல்லை கற்கள் எதுவும் நடப்படவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 பட்டா, வா.சா.ஆ.2 கணினி பட்டாபடியும், பி.வா.சா.ஆ.2 யூ.டி.ஆர். பட்டாபடியும், தாவா சொத்துக்கள் முழுவதும் கூட்டு பட்டாவாகத்தான் உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 192/2 ல் உள்ள நிலம் 16 முதல் 22 பிரதிவாதிகளின் பாட்டி வழி சொத்து என்பதால்தான் அவர்களுக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் தாவாவில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லையென்றால், சரியல்ல. சர்வே எண் 94 ல் உள்ள நிலத்திலும் பாகஸ்தர்களுக்கு 1/8 பாகம் என்று கூறித்தான் 1991 ல் அனைத்து பாகஸ்தர்களும் கிரிட்டேஜ் நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால், சரிதான். அவரவர்கள் பாகத்தை தனித்தனியாக விற்றுக்கொண்டார்கள். அதில் என் மாமியார் பழனியம்மாளும், அவரது மகன் கணேசனும் 1/16 பாகத்தை விற்பனை செய்தார்கள் என்றால், சரியல்ல. 1/8 பாகத்தைதான் விற்றார்கள். எனக்கும், பொங்கியம்மாளுக்கும் அவரது வாரிசுகளுக்கிடையேயும், 3 ம் பிரதிவாதி மணிக்கும், அவரது வாரிசுகளுக்கும், 6 ம் பிரதிவாதி அலமேலுக்கும், 26 ம் பிரதிவாதி மாலதிக்கும் இடையே எந்த விரோதமும் இல்லையென்றால், சரிதான். வரதப்பகவுண்டரின் மக்களான சின்னாகவுண்டரும், செல்லப்பகவுண்டரும் எந்த தேதி, மாதத்தில் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால், எனக்கு தெரியாது. என் மாமனார் பழனியப்பனும், அவரது சகோதரர் மாரிமுத்துவும் எந்த தேதி, மாதம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால், அவர்கள் பாகம் பிரிக்கவில்லை.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/- ராமசாமி

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.